இணை ஆணையர் (வ.வ.), அதிக வரி செலுத்துவோர் பிரிவு அவர்களின்
செயல்முறை ஆணைகள், சென்னை-600 008

முன்னிலை : திரு. மு. பாலாஜி, இ.ஆ.ப.

**************************************************************************

செ.மு. எண் : 484/2017/அ1

நாள் : 30.03.2017

பொருள் : பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - இணை ஆணையர் (வவ) அலுவலகம், அதிக வரி செலுத்துவோர் பிரிவு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - 2013-2014 மற்றும் 2014-2015 தொகுதி - IV தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்ட தட்டச்சர் திரு. கு. யோகேஷ் - பணி நியமனத்தின் பொருட்டு இணை ஆணையர் (வவ), அதிக வரி செலுத்துவோர் பிரிவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - பணிவரன் முறை செய்து ஆணை வழங்கல் - தொடர்பாக.

பார்வை :

1) செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை - 3 அவர்களின் கடித எண். 4664/PSD-A3/2015, நாள். 30.10.2015.

2) இணை ஆணையர் (வவ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் செமுநக. 791/2016/அ2-1, நாள். 03.03.2016.

3) இணை ஆணையர் (வவ), சென்னை (வடக்கு) கோட்டம் அவர்களின் செமுநக. 1327/2016/அ1, நாள். 18.03.2016.

4) இணை ஆணையர் (வவ), அதிக வரி செலுத்துவோர் பிரிவு சென்னை-8 அவர்களின் செமுநக. 902/2016/அ1, நாள். 24.05.2016.

5) அரசு ஆணை எண்.130, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள்.22.07.2008

******

ஆணை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2013-2014 மற்றும் 2014-2015 ஆம் ஆண்டுகளுக்கு நடத்தப்பெற்ற தொகுதி - IV தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, தட்டச்சராக தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பணி நியமனம் செய்யும் பொருட்டு பார்வை 1-ல் காணும் கடிதக்குறிப்பின் மூலம் இணை ஆணையர் (வவ), சென்னை (தெற்கு) கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பின்னர் பார்வை 2-ல் காணும் செயல்முறை ஆணையின்படி இணை ஆணையர் (வவ), சென்னை (வடக்கு) கோட்டத்திற்கு மறுஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3-ல் காணும் செயல்முறை ஆணையின்படி இணை ஆணையர் (வவ) அதிக வரி செலுத்துவோர் பிரிவில் தட்டச்சராக பணி நியமனம் செய்யும் பொருட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 4ல் காணும் செயல்முறை ஆணையின்படி தட்டச்சராக பணி நியமனம் செய்யப்பட்டு 01.06.2016 முற்பகல் பணிபுரிந்து வரும் **திரு. கு. யோகேஷ்** அவர்களுக்கு, பணியில் சேர்ந்த நாளான **01.06.2016** முற்பகல் முதல், பார்வை (2) மற்றும் (3) இல் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு தனியாளருக்கு கீழ்க்கண்ட

1/9/2022

Assistant Commissioner (ST)
Tondiarpet Assessment Circle
Chennai-600 003.

நிபந்தனைகளுடன் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

> **"The regularization is subject to the outcome of the WPs relating to Group-IV services 2013 - 2014 and 2014 - 2015 recruitment pending on the files of the Hon' ble High Court of Madras / Madurai Bench of the Hon' ble High Court of Madras".**

2. தனியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவகாலமாக நிர்ணயிக்கப்படுகிறது.

3. தகுதிகாண் பருவத்தில் தனியாளர் துறைத் தேர்வான தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் (Tamil Nadu Government Office Manual) மற்றும் பார்வை - 5ல் காணும் அரசாணையின்படி தமிழ்நாடு தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தால் நடத்தப்படும் கணினி வழி அலுவலக தன்னியக்கமுறை (Computer on Office Automation) ஆகிய தேர்வுகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

ஒம்./- மு. பாலாஜி
இணை ஆணையர் (வ.வ.)
அதிக வரி செலுத்துவோர் பிரிவு
சென்னை-8

பெறுநர்
திரு. கு. யோகேஷ்,
தட்டச்சர்,
இணை ஆணையர் (வவ), அதிக வரி செலுத்துவோர் பிரிவு, சென்னை - 8.

நகல் :

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை - 3.
2. இணை ஆணையர் (வவ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை - 6.
3. இணை ஆணையர் (வவ), சென்னை (வடக்கு) கோட்டம, சென்னை - 6.
4. இவ்வலுவலக அ2 உதவியாளர்.
5. ப.உ.. கட்டு.
6. உதிரி.

// உண்மை நகல் //

உதவி ஆணையர் (வ.வ.) 31/3/17
இணை ஆணையர் (வவ) அவர்களின்
நேர்முக உதவியாளர்( மு.கூ.பொ.)
அதிக வரி செலுத்துவோர் பிரிவு
சென்னை-8.

31.03.17 31.3.17